5. ராவணன் என்றவன் சிறந்தவன் என்று கூறும் கவிதைகள். – The life of Mine

thelifeofmine3.wordpress.com/2024/05/09/book-3/

May 9, 2024

இராவணன் அயோக்கியன் எனில்.. சீதை பத்தினியாக இருக்க… வாய்ப்பில்லை..
சீதை பத்தினி எனில், இராவணன் யோக்கியனே…!

அறிஞர் : அண்ணா

உன்னை பற்றி யார் என்ன சொன்னாலும் அது எனக்கு கவலை இல்லை…என்னை பொறுத்தவரை நீ தான் நல்லவன் உன்னிடம் கற்க பல உள்ளது…

– ப்ரியங்கா சுப்பையா

இராவணன் பற்றிய கவிதை!
இருகண் படைத்தவனே இவள் அழகில் எரிந்திடுவான்! இருபது கண் படைத்த நான் என்ன செய்வேன்?

-கவிக்கோ அப்துல்ரகுமான்

தர்மம் எனும் பெயரில் தன்னை நம்பி வந்தவர்கள் அனைவரையும் காயப்படுத்தி இருந்தால் கடவுள் ஆகியிருப்பான்
தன் விருப்பப்படி வாழ்ந்ததால் தலைவன் ஆகிவிட்டான்

ஆம் இராவணன் நிச்சயம் கடவுள் இல்லை

-Unknown

இராவணன் கெட்டவன் தான்.. ஆனால் சீதைக்கு மட்டும் நல்லவன்... இராமன் அனைவருக்கும் நல்லவன். ஆனால்.. சீதைக்கு மட்டும் கெட்டவன்... நம் புரிதலில் தான் இருக்கு...

-Unknown

ஒரு பொண்ணை அவளோட அனுமதி இல்லாம தொடக்கூடாதுன்னு உத்திர பிரதேச பீடாவாயனுங்களுக்கு பாடம் எடுக்கணும்ன்னா அவனுங்களுக்கு கட்ட வேண்டியது ராமர் கோவில் அல்ல..
“இராவணன் கோவில்”

-Unknown

இதிகாசம், புராணம் மற்றும் காப்பியங்களில் மிகவும் விருப்பமான கதை மாந்தர் சீர்த்த பண்பினாள் சீதையை, உலகு சீர்தூக்க செய்தவன் அவன்....! யாமறிந்த கதைமாந்தர்களில் கள்ளம் ஆடுபவன்.... ஆனால் கபடமற்றவன் அவன்...! யாசகனாய் வந்தாலும்; தீயை தீண்டாமல் கவர்ந்து சென்றான் அவன் ஆனால் தீக்கு இறை ஆக்காதவன்... மனம் ஒப்பாத சீதையிடன், மாண்புடன் இருந்த கண்ணியன் அவன் ராட்சசன் அல்ல அவன் பத்து தலை இருந்தாலும் பண்பினால் ரட்சகன் அவன்.... இன்று பலரில் விரும்பி தேடப்படும் ராவணனே அவன்...!

-Suganyakk

வாலியை நேரில் நின்று வீழ்த்த தைரியம் இல்லாமல், சகோதரர்களுக்கிடையே சண்டையை மூட்டி விட்டு, மரத்துக்கு பின்னால் ஒளிந்திருந்து வாலியை அம்பெய்தி கொன்ற ராமன் வீரனா? இல்லை சகோதரமே பகையான பின்பும், துரோகம் சூழ்ந்த போதும், அடி பணிய மறுத்து போரிட்டு மாண்ட ராவணன் வீரனா?

-Unknown

தன்னுடைய தங்கையின் மானத்திர்காக கடவுளிடம் போரிட்டு இறந்த இராவணன் கெட்டவன் நாட்டு மக்களின் பேச்சை கேட்டு தன் மனைவியின் கற்பை சோதித்த ராமன் நல்லவரங

-Unknown

யார் உண்மையில் கடவுள்.?
சீதையை மீட்க ராமன் கட்டிய பாலம் உண்மையானால், சீதையை கடத்த ராவணன் கட்டிய பாலம் எங்கே?
அப்படி பாலம் கட்டாமல் பறந்து வந்து சீதையை ராவணன் தூக்கி இருந்தால் ராவணன் கடவுளா? ராமன் கடவுளா?

-Unknown

ஓர் பெண்ணைத் தொடாது கவர்ந்து சிறை வைத்தவன் தமிழன் “இராவணன்”…
சூர்ப்பனகையின் மூக்கைத் தாக்கி பெண் மீதான வன்முறையை துவக்கியவன் ஆரியன் “இலட்சுமணன்”!

-Unknown

இராவணன் கடவுளா?
– muhi_kirukalgal

இராவணன் நிச்சயம் கடவுள் இல்லை

சந்தேகத்தின் அடிப்படையில் ஊர் சொல்லுக்காக மனைவியை சிதையில் இறக்கும் கடவுள்களின் மத்தியில்…
வன்புணர்வு செய்யப்பட்ட மனைவியை கை விடாமல் அரவணைத்துகொண்டவன்

இராவணன் நிச்சயம் கடவுள் இல்லை
பிறப்பின் அடிப்படையில் தலையில் பிறந்தவன் உயர்த்தவன் காலில் பிறந்தவன் தாழ்ந்தவன் என சமூக ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கிய கடவுள்களின் மத்தியில்
பிறப்பால் அனைவரும் சமம் என ஒதுக்கப்பட்டவர்களின் பக்கம் நின்றவன்

இராவணன் நிச்சயம் கடவுள் இல்லை

கர்ணன், வாலி என மாவீரர்களை மறைந்திருந்து வீழ்த்தி அதுவே அறம் என கூறிய கடவுள்களின் மத்தியில்
வாய்ப்புகள் அதிகம் இருந்தும் முதுகில் குத்தாமல் இறக்கும் வரை நேருக்கு நேர் சண்டை செய்து உயிர் நீத்தவன்

இராவணன் நிச்சயம் கடவுள் இல்லை

***ணாசிரம முறையின் தவறுகளை சுட்டி காட்டியதற்காக சிறுவன் சம்புகனின் சிரத்தை சீவி எறிந்த கடவுள்களின் மத்தியில்
எட்டு வயது மகனை சிதையில் பறி கொடுத்தும் எதிரியின் மனைவி மீது சிறு கீறல் விழாமல் பார்த்து கொண்டவன்

இராவணன் நிச்சயம் கடவுள் இல்லை

குடிமக்களின் நன்மைக்காக ஆட்சி செய்யாமல் குறிப்பிட்ட கூட்டத்தின் நன்மைக்காக மட்டும் ஆட்சி செய்த கடவுள்களின் மத்தியில்
குலத்தின் வழி யாரும் உயர்ந்தவர் இல்லை குடிமக்கள் அனைவரும் உயர்ந்தவர் எனும் கொள்கை கொண்டவன் தர்மம் எனும் பெயரில் தன்னை நம்பி வந்தவர்கள் அனைவரையும் காயப்படுத்தி இருந்தால் கடவுள் ஆகியிருப்பான்
தன் விருப்பப்படி வாழ்ந்ததால் தலைவன் ஆகிவிட்டான்
ஆம் இராவணன் நிச்சயம் கடவுள் இல்லை

இராவணனாக இருக்கும் வரைதான்.. சீதைக்கு பாதுகாப்பு மனிதனாக மாறிவிட்டால் எரிக்க படுவாள் சந்தேக தீயில்… சீதை

இராவணன் நெஞ்சில் சீதை இருக்கிறாள் என்று தெரிந்தும் அவன் நெஞ்சை அம்பால் துளைத்தது இராமன் காதல்...இராமன் நெஞ்சில் சீதைதான் இருக்கிறாள் என்று தெரிந்ததும் அன்பால் அவன் நெஞ்சைத் துளைக்காமல் விட்டது இராவணன் காதல்...